செ.வெ.எண்.86 நாள்: 28.08.2019

**தூத்துக்குடி மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத் துறை மூலம் விலையில்லாமல் வழங்கப்பட்ட கறவைப்பசு மற்றும் ஆடுகளுக்கு சிறப்பு மருத்துவ முகாம் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

---

தூத்துக்குடி மாவட்டத்தில் இலவச கறவைப்பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள் வழங்கும் திட்டத்தில் 2011-2012 முதல் 2018-2019-ம் வழங்கப்பட்ட 435 இலவச கறவைப்பசுக்கள் மற்றும் 16476 வெள்ளாடுகள் மற்றும் இவைகளின் குட்டிகள் ஆகியவற்றுக்கு இந்த திட்ட கிராமங்களில் கறவைப்பசுக்களுக்கு இனப்பெருக்க முகாமும், ஆடுகளுக்கு குடற்புழு நீக்க முகாமும் மற்றும் அந்த பகுதி கால்நடைகளும் மருத்துவ முகாமும் அப்பகுதி கால்நடை உதவி மருத்துவர்களைக் கொண்டு 30.08.2019 மற்றும் 31.08.2019 ஆகிய இரு நாட்கள் நடைபெற இருப்பதால் விவசாயிகள், கால்நடை வளர்ப்போர் கால்நடைகளுக்கு இலவசமாக சிகிச்சை மற்றும் நலப்பணிகளை முகாமில் பெற்று பயனடைய கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.